**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 150/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **திரு. பிரபாகரன்** | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | **திரு. குலசேகரன்** | **Calling** | **:** | **தலைமை காவலர், ஒட்டன்சத்திரம் காவல் நிலையம்** |
| **Village** | **:** | **பாலகிருஷ்ணாபுரம்** | **Religion** | **:** | **இந்து** |
| **District** | **:** | **திண்டுக்கல்** | **Age** | **:** | **41** |
| | | | **Dated** | **:** | **11.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**2–ம் எதிரி ஆஜர். 3, 4 ம் எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 3), **திரு. பிரபாகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 18.06.2016 ம் தேதி காலை 03.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு. ரபிக் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சதானந்தம் ஆகியோருடன் குடைப்பாறைப்பட்டி, முருகன் கோவில் அடிவாரத்தில் ரோந்து செல்லும்போது, பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட 1. குமரேசன், த/பெ. மருது சேர்வை, 2. ராஜா

என்ற கப்பர் ராஜா, 3. சக்திவேல், 4. மணி, 5. அருள் குணசேவியர் ஆகியோர் எங்களை பார்த்தவுடன் ஓட முற்பட்டபோது, குமரேசன் மற்றும் கப்பர் ராஜாவைப் பிடித்து விசாரித்தபோது, முன்னுக்குப்பின் முரணாக பதில் சொன்னதால் 03.30 மணிக்கு அவர்களைக் கைது செய்து, 04.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, குற்ற எண். 463/2016, பிரிவுகள் 41(2) Cr.P.C. வழக்கு பதிவு செய்து, எதிரி குமரேசனை தனியாக சாட்சிகள் மாயாண்டி மற்றும் உதயக்குமார் முன்னிலையில் விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் யார் தூண்டுதல் இன்றியும், அச்சுறுத்தல் இன்றியும் தாமாக முன்வந்து அளித்தார். பெரிய வீடாக கொள்ளையடித்து வெளியே போய் செட்டிலாக வேண்டும் என திட்டம் தீட்டியதாகவும், அதற்கு பயன்படுத்துவதற்காக ஆயுதங்களை ஒளித்து வைத்துள்ளதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி குற்ற எண்ணில் சட்ட மாறுதல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் செய்து, மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். பின்பு 06.30 மணிக்கு சாட்சிகள் மற்றும் எதிரிகளுடன் குடைப்பாறைப்பட்டி சம்பவ இடத்திற்கு சென்று, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்பு 07.30 மணிக்கு எதிரி குமரேசன் எடுத்து ஆஜர் செய்த வாள் கத்தி – 2, உருட்டுக்கட்டை – 2 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார். மேற்படி வாள்கத்தி – 2 மற்றும் உருட்டுக்கட்டைகள் – 2 ஆகியவை முறையே **சா.பொ. 1 முதல் சா.பொ. 4 வரை குறியீடு செய்யப்படுகிறன்றன**. பின்னர் 07.45 மணியளவில் எதிரி கப்பர் ராஜா எடுத்து ஆஜர்படுத்திய கத்தி – 1 யை அத்தாட்சியில் கைப்பற்றினார். **மேற்படி கத்தி – 1 சா.பொ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

அன்றாட பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக குறிப்பதற்கு என்னிடம் ஒரு பாக்கெட் நோட்புக் இருக்கும் என்றால், சரிதான். அதில் காலை ரோந்து போனது, எதிரிகளைக் கைது செய்ததது, சான்று பொருட்களை கைப்பற்றியது சம்மந்தமாக குறிப்புகள் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி நோட்புக்கை நான் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால், நானும் ஒப்படைக்கவில்லை, அவர்களும் கேட்கவில்லை. ரோந்து பணிக்காக சென்ற பகுதி முறைக்காவல் பணிக்காக பகுதி என்றால், அன்று நான்தான் முறைக்காவலில் இருந்தேன். அன்று நான்தான் முறைக்காவல் பணியில் இருந்தேன் என்ற விபரத்தினை புலன் விசாரணை அதிகாரியிடம் சொல்லவில்லை என்றாலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். மேற்படி முறைக்காவல் பணி எத்தனை மணி நேரம் இருக்கும் என்று கேட்டால், இரவு 08.00 மணி முதல் காலை 08.00 மணி வரை இருக்கும். அந்த பீட் நம்பர் – 2. மேற்படி முறைக்காவல் நேரத்தில் இரவு 08.00 மணி முதல் காலை 08.00 மணி வரை என்ன என்ன பணிகளை மேற்கொண்டேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்ற பகுதி குடியிருப்புகள் நிறைந்த பகுதி என்றால், சரியல்ல. குடியிருப்புகள் தள்ளித்தான் இருக்கும். பக்கத்தில் என்ன என்ன இடம் இருக்கும் என்று கேட்டால், சுடுகாடு தான் இருக்கும். 2-ம் எதிரி கப்பர் ராஜாவிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். மற்ற 3, 4, 5 எதிரிகளிடம் இருந்தும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் முன்னுக்குப்பின் முரணாக

என்ன விபரத்தினை  சொன்னார்கள் என்று கேட்டால், பெயர், முகவரி ஆகியவற்றை மாற்றி சொன்னார்கள்.  அதை நான் புலன் விசாரணை அதிகாரியிடம் சொன்னேனா என்று கேட்டால், இல்லை.  பெயர், முகவரி மாற்றி சொன்னதாக நான் சொல்லியுள்ள விபரம் 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.  நான் முதல் விசாரணையில்  சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ரோந்து பணி எதுவும் செய்யவில்லை என்றாலும், எந்த எதிரியையும் கைது செய்யவில்லை என்றாலும், எந்த ஒப்புதல் வாக்குமூலமும் எந்த எதிரியும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த ஒரு சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.  புள்ளி விபர கணக்கிற்காக மட்டுமே எதிரிகள் மீது இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.  எனது மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.11 18:28:14 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 150/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மாயாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முத்துச்சாமி** | **Calling** | : | **நெசவு வேலை** |
| **Village** | : | **பாறைப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **11.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2-ம் எதிரி ஆஜர். 3, 4 ம் எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 6), **திரு. மாயாண்டி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நெசவு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி குமசேரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3, அத்தாட்சியில் (2 எண்ணிக்கை) உள்ள கையொப்பங்கள் அ.சா.ஆ. 4 மற்றும் 5, பார்வை மகஜரில் உள்ள**

முதலாவது கையெப்பம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

போலீசார் விசாரணையில் கடந்த 18.06.2016ம் தேதி காலை 04.30 மணிக்கு நானும், உதயகுமார் என்பவரும் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையம் முன்பு நடந்து சென்று கொண்டு இருந்தபோது, மேற்படி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எங்களை கேட்டுக் கொண்டதன்பேரில் பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட 1. குமரேசன், 2. ராஜா என்ற கப்பர் ராஜா ஆகியோர்களை விசாரித்தார்கள். அதில் 1–வது எதிரியான குமரேசன் என்பவர் யாருடைய துன்புறுத்துதலும் அச்சுறுத்துதலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், உதயகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன்பேரில் நானும், உதயக்குமார் மற்றும் எதிரிகளுடன் குடைப்பாறைப்பட்டிக்கு வடக்கே உள்ள முருகன் கோவில் அடிவாரம் சென்று, எங்கள் முன்பு சம்பவ இடத்தினைப் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், உதயகுமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், அதன்பின் எங்கள் முன்னிலையில் 07.30 மணிக்கு 1–வது எதிரி குமரேசன் எடுத்து ஆஜர் செய்த சுமார் 70 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1, சுமார் 43 செ.மீ. நீளமுள்ள

மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1, சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய உருட்டுக்கட்டைகள் – 2 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், சுமார் 07.45 மணிக்கு 2–வது எதிரி ராஜா என்ற கப்பர் ராஜா எடுத்து ஆஜர் செய்த சுமார் 85 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1 யும் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மேற்படி அத்தாட்சிகளில் நானும், உதயக்குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.11 18:28:23 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 150/2024**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. உதயகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அழகுமலை** | **Calling** | : | **நெசவு வேலை** |
| **Village** | : | **பாரதிபுரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **11.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2–ம் எதிரி ஆஜர். 3, 4 ம் எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 7), **திரு. உதயகுமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நெசவு வேலை செய்து வருகிறேன். அசா. 3 ஐ தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி குமசேரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 7, அத்தாட்சியில் (2 எண்ணிக்கை) உள்ள கையொப்பங்கள் அ.சா.ஆ. 8 மற்றும் 9, பார்வை**

**மகஜரில் உள்ள இரண்டாவது கையெப்பம் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

போலீசார் விசாரணையில் கடந்த 18.06.2016ம் தேதி காலை 04.30 மணிக்கு நானும், மாயாண்டி என்பவரும் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையம் முன்பு நடந்து சென்று கொண்டு இருந்தபோது, மேற்படி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எங்களை கேட்டுக் கொண்டதன்பேரில் பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட 1. குமரேசன், 2. ராஜா என்ற கப்பர் ராஜா ஆகியோர்களை விசாரித்தார்கள். அதில் 1–வது எதிரியான குமரேசன் என்பவர் யாருடைய துன்புறுத்துதலும் அச்சுறுத்துதலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மாயாண்டி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன்பேரில் நானும், மாயாண்டியும் மற்றும் எதிரிகளுடன் குடைப்பாறைப்பட்டிக்கு வடக்கே உள்ள முருகன் கோவில் அடிவாரம் சென்று, எங்கள் முன்பு சம்பவ இடத்தினைப் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், மாயாண்டி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், அதன்பின் எங்கள் முன்னிலையில் 07.30 மணிக்கு 1–வது எதிரி குமரேசன் எடுத்து ஆஜர் செய்த சுமார் 70 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1, சுமார் 43 செ.மீ. நீளமுள்ள

மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1, சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய உருட்டுக்கட்டைகள் – 2 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், சுமார் 07.45 மணிக்கு 2–வது எதிரி ராஜா என்ற கப்பர் ராஜா எடுத்து ஆஜர் செய்த சுமார் 85 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் கத்தி –1 யும் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மேற்படி அத்தாட்சிகளில் நானும், மாயாண்டியும் கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.11 18:28:32 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.